## இலங்கை நியமங்கள் நிறுவகம் - 2018

------------------------------------------------------------------------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை நியமங்கள் நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்குஇணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 2 இன் பிரகாரம் இருப்பு கிரயம் மற்றும் தேறிய இற்றைப் பெறுமதி ஆகியவற்றில் குறைவான பெறுமதியில் காண்பிக்கப்பட வேண்டியதுடன்,ரூபா 1,357,346 தொகையான பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக கொண்டு செல்லும் பெறுமதி தொடர்பான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கிரயம் மற்றும் தேறிய இற்றைப் பெறுமதி ஆகியவற்றில் குறைவான பெறுமதியில் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியை காண்பிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இருப்பின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் பிரகாரம் கடன்பட்டோர் மீதிகள் அதன் காலக்கழிவு செய்யப்பட்ட பெறுமதிக்கு (Amortized Cost) காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான காணப்பட்ட 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்படும் ரூபா 32,909,431 ஆக 364 கடன் பட்டோர் மீதிகளுக்கான அழிவுநட்ட சோதனை (Impairment Test) மேற்கொள்ளப்பட்டு கொண்டு செல்லும் பெறுமதியை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் பட்டோர் மீதிகள் அவற்றின் காலக்கழிவு பெறுமதிக்கு காண்பிப்பதற்காக எதிர்காலத்தில் அழிவுநட்ட சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இருப்பின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 28,559,722 பெறுமதியான நாணயக் கடித முற்பணங்கள் 4 இற்குரிய உபகரணங்கள் 2017 நவம்பர் முதல் 2018 திசெம்பர் வரையான காலப்பகுதியினுள் நிறுவனத்திற்கு கிடைத்திருந்த போதிலும், அவற்றிற்குரிய நாணயக் கடித முற்பண மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு 2019 மே கணக்காய்வு திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நாணயக் கடிதங்கள் தீர்க்கப்பட்டிராமையால் ரூபா 28,559,722 நடைமுறையல்லா சொத்துக்களின் பெறுமதி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உபகரணங்கள் இன்றளவில் கிடைத்துள்ளது. பொருட் பெறுவனவு பதிவேட்டினை வழங்குவதற்கு இன்றளவில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சரியான கணக்கீட்டு நடைமுறைகள் பின்பற்றப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ள முற்பணப் புத்தகங்களில் சீராக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், நிறுவனத்தின் பிரிவுகளுக்கிடையேயான பணிகளுக்காக உரி இணைப்பு பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2016 – 2018 காலப்பகுதிக்குரியதாக நிறுவனத்தினால் நடாத்தப்பட்டிருந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினூடாக பெற வேண்டிய வருமானமான ரூபா 437,260 தொகை கணக்குகளில் விடப்பட்டிருந்தமையால் மிகையானது அந்த பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018.12.31 ஆந் திகதியில் உள்ளபடியாக பெற் வேண்டிய ரூபா 437,260 ஆன கடன் பட்டோர் மீதி 2018.12.31 ஆந் திகதிய ஒள்ளக கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளது. 2018.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான பயிற்சி வருமானம் இந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான வருமானங்கள் இனங்காணப்பட்டு கணக்குகளில் சரியாக சீராக்கம் செய்யப்பட வேண்டியதுடன், அதற்கான பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகள் அமுல்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டினுள் ஓய்வூதியம் பெற்றுச் செல்ல உள்ள ஊழியர்களுக்குரிய பணிக்கொடை ரூபா 15,001,262 பெறுமதியானது 2018 ஆம் ஆண்டினுள் நடைமுறை பெறுப்புகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைக்கு பணிக்கொடை கொடுப்பனவு கணக்கிடப்பட்டுள்ளது. அவ்வாறே பணிக்கொடை பொறுப்புகளின் கணிப்பீட்டின் போது உரிய திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்றுச் சென்ற ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய பணிக்கொடை பெறுமதி சீராக்கப்பட்டுள்ளது. சரியான பேரேட்டுக் குறிப்புகளின் மூலம் இந்த தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சரியான கணக்கீட்டு நடைமுறைகள் மூலம் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதறகு மற்றும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டின் போது மின்வலு மற்றும் வலு சக்தி அமைச்சிற்கு நிறுவனத்தின் 5 ஊழியர்கள் இணைப்பு செய்யப்பட்டு சம்பளம் செலுத்தியமையின் காரணத்தால் நிறுவனத்திறகு பெற வேண்டிய ரூபா 663,675 தொகை இது வரையிலும் அறவிடப்பட்டிராததுடன், 2015 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் 4 இடமிருந்து பெற் வேண்டிய ரூபா 916,466 ஆன கடன் பட்டோர் மீதி 2019 மே வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மின்வலு மற்றும் மற்றும் மின்சக்தி அமைச்சானது அரச நிறுவனம் ஒன்றென்பதால் பெற வேண்டிய ரூபா 663,675 தொகையான பெறுமதியை புத்தகங்களிலிருந்து பதிவழிக்க 2019 ஆம் ஆண்டின் 03 ஆம் பொதுச் சபை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | நிறுவனத்திற்கு பெற வேண்டிய பணத்தை துரிதமாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், பெற வேண்டிய மீதிகளை புத்தகங்களிலிருந்து பதிபளிப்பதற்கும் நடடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனின் அதற்குரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சில வருடங்களாக முன்கொண்டு வரப்படும் ரூபா 50,741 தொகையான மதிப்பிழந்த காசோலைகள் 02 இற்காக 2019 மே மாதம் பணம் கிடைத்திருக்கவில்லை. | மதிப்பிழந்த காசோலைகளுக்குரிய பெறுமதியை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிறுவனத்திற்கு பெற வேண்டிய பணத்தை துரிதமாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அது தொடர்பிலான கிரயம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| <u>சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு</u> | <u>இணக்கமின்மைகள்</u> | <u>முகாமைத்துவத்தின் கருத்துரை</u> | <u>பரிந்துரைகள்</u> |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 753(2) | நிதிப்பிரமாணம் 753(2) இன் பிரகாரம் பொருட்கள் கிடைத்தவுடன், பொருள் பெறுவனவு பத்திரங்கள் அந்த பொருட்களை பொறுப்பேற்கும் உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்ட முதற் பிரதிக்கு உரியதாக வழங்கிய உத்தியோகத்தருக்க வழங்க வேண்டியதுடன், உடனடியாக பொருட்பதிவேட்டிலும் உட்படுத்த வேண்டும் எனினும் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பொருட்கள் கிடைத்தவுடன், பொருள் பெறுவனவு பத்திரங்கள் அந்த பொருட்களை பொறுப்பேற்கும் உத்தியோகத்தரால் விநியோகிக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 137,192,310 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மிகை ரூபா 125,931,329 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 21,260,981 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு வருமானம் ரூபா 32,411,476 இனால் அதிகரித்திருந்தமை, பராமரிப்புக் கிரயம் ரூபா 4,590,447 இனால் மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவினம் ரூபா 26,509,176 இனால் குறைவடைந்திருநதமையும் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2011 பெப்ரவரி 07 மற்றும் 2011 பெப்ரவரி 21 ஆந் திகதிய மாதாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு தொடர்பில் பொதுச் சபையின் தீர்மானங்களில் குறிப்பிடப்பட்ட அபிப்பிரேரரண கொடுப்பனவுகளை செலுத்தும் வீதங்களுக்கு முரணாக 04 | சபையின் தீர்மானங்களின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கொடுப்பனவுகளுக்காக உறுதிப்பாடொன்று காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களில் செலுத்த வேண்டிய வீதங்களை விஞ்சி ரூபா 510,520 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. இந்த கொடுப்பனவுகளுக்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட இலாபம் பல்வேறு விதங்களில் கணிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இரசாயன பொருட்களை காலத்திற்கு காலம் பரிசோதித்து, காலாவதியாகும் போது கைத்தவிர்க்கும் முறையான நடைமுறையொன்று நிறுவனத்தினுள் இல்லாதிருந்ததுடன், தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது 1998 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ரூபா 486,738 கிரயமான காலாவதியான 31 இரசாயன பொருட்கள் களஞ்சியத்தில் காணப்பட்டன. அவற்றை கைத்தவிர்க்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அசைவற்ற இரசாயன பொருட்களை அகற்றுவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சில பொருட்களை அழிப்பதற்காக ஹொல்சிம் கம்பனிக்கு அனுப்பப்பட்டுள்ளது. மற்றைய விடங்கள் பட்டியலிடப்பட்டவாறு உள்ளது. | கைத்ததவிர்ப்பு நடவடிக்கைகள் காலத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | ஒருங்கிணைந்த முகாமைத்துவ தகவல் கட்டமைப்பு தாபிப்பதற்குரிய மதியுரையாளர் ஒருவரை தெரிவு செய்வதற்காக 2017 ஏப்ரல் 27 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த உடன்படிக்கையின் பிரகாரம் நான்கு கட்டங்களில் கொண்ட இந்த பணி 06 மாதங்களினுள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. முதலாம் கட்டத்தின் பணியான தற்போதுள்ள முறைமையை மதிப்பீடு செய்தல், அதற்கு தேவையான அமைப்புக் குறிப்பீடுகளை தயாரித்தல், அதற்கு பொருத்தமான முன்மொழிவொன்றினை வழங்குதல், திட்டம் தயாரித்தல் போன்ற பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 ஆம் ஆண்டினுள் ரூபா 1,816,103 தொகை செலுத்தப்பட்டிருந்தது.<br><br>இந்த தகவல் கட்டமைப்பினை தாபிப்பதற்காக ரூபா 150 மில்லியனான நிதி 2018 ஆம் ஆண்டின் பாதீட்டின் மூலம் இலங்கை நியமங்கள் நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், குறித்த பணியினை மேற்கொள்ளாமையால் அந்த நிதியினை பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவதற்காக நிறுவனம் தவறியிருந்தது. | இந்த செயற்திட்டத்திற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று (Action Plan) முதலில் தயாரிக்கப்படுவதுடன், அது பல்வேறு சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டிருந்தது. அதே போன்று பொதுச் சபையினால் செயற்திட்டம் உரு வருடத்திற்கு இடை நிறுத்தப்பட்டதன் பின்னர் புதிய செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறை திருத்தப்பட்டவாறு உள்ளதால் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை இணைத்துக்கொள்ள முடியாதுள்ளதென அறிவிக்கின்றேன். | ஒருங்கிணைந்த முகாமைத்துவ தகவல் கட்டமைப்பு தாபிப்பதற்குரிய தேவைப்பாடு கருத்திற் கொள்ளப்பட்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இரசாயன ஆய்வுகூட உபகரணங்கள் தொடர்பிலான கட்டுப்பாடு. | | |
| | (i) ரூபா 6,456,670 கூட்டுப் பெறுமதியுடைய 3 உபகரணங்கள் இரசாயன ஆய்வுகூடத்தினுள் காணப்பட்ட | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | -கொள்வனவு செய்யப்படும் இரரசாயன உபகரணங்களுக் |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், அந்த உபகரணத்திற்காக களஞ்சியத்தினால் வழங்கல் தாள் (Issue Notes) வழங்கப்பட்டிருக்கவில்லை. | | காக களஞ்சியத்தினால் விநியோகித்தல் தாள் வழங்கப்பட்டு களஞ்சியத்தின் புத்தகங்களிலிம் பதிவு செய்ய வேண்டும். |
| (ii) | 2018.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான ஐந்தொகையின் மீளாய்வாண்டிற்கான கொள்வனவுகளினுள் ரூபா 978,183 பொறுமதியுடனான Bench Top Hydraculic Pressure எனும் பெயருடைய உபகரணம் குறிப்பிடப்படுகின்ற போதிலும், அந்த உபகரணம் தொடர்பில் களஞ்சிய பதிவேடுகளில் அல்லது நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிராதமை அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | -சரியான கிரயமொன்று கணக்குகள் மற்றும் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (iii) | இரசாயன ஆய்வுகூடங்களிலுள்ள உபகரணங்களை கடமைகளுக்காக நிறுவனத்திலிருந்து வெளியே எடுத்து செல்ல நேரும் சந்தர்ப்பங்களில் அந்த உபகரணங்களை கொண்டு செல்லல் தொடர்பில் பதிவு செய்யப்படுவதில்லை என அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | -பெறுவனவுகளுக்காக பொருட் பெறுவனவு பத்திரம் வைத்துக்கொள்ளப்பட வேண்டும். |
| (iv) | 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 832,521,212 பெறுமதியான இரசாயன ஆய்வுகூட உபகரணங்கள் காணப்படுவதுடன், அந்த உபகரணங்களை ஒன்றுக்கொன்று வேறுபடுத்தி இனங்காண களஞ்சியத்திலிருந்து உபகரணங்களை விநியோகிக்கும் போது குறியீடிடடல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | -பொருட்களை இனங்காண்பதற்காக பொருத்தமான இனங்காணல் நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | இரசாயன ஆய்வுகூட உபகரணங்கள் தொடர்பில் களஞ்சியத்தில் மற்றும் இரசாயன ஆய்வுகூடடங்களில பொருத்தமான முறையில் பொருட்பதிவேட்டு புத்தகங்களை பேணுவதற்காக பொதுவான முறையொன்று நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | -பொருட்பதிவேட்டு புத்தகங்களை பேணுவதற்காக பொதுவான முறையொன்று நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | நியமச் சான்றிதழ்களை வழங்கும் போது பரீட்சிப்பதற்காக 2019 யூன் 12 ஆந் திகதிய TEC/B/SLSI/INFO/19/01 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் கோவை 83 இன் மாதிரியொன்றினை பொருள் சான்றுபடுத்தல் பிரிவிலிருந்து கோரியிருந்த போதிலும், அவற்றுள் 47 கோவைகள் கணக்காய்விற்காக கிடைக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கண்காய்வு அதிகாரச்சட்டத்தின் 7(1)(அ) இன் பிரகாரம் கணக்காய்விற்காக தகவல் வழங்க வேண்டும் என உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்க வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் அனுமதிப்பத்திரம் இரத்தாகிய தயாரிக்கப்பட்ட தானிய உணவு உற்பத்திக்காக மீள அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிப்பதற்கு உரிய மாதிரியொன்று பரிசோதிக்கபட்டிருந்தது 2018 யூலை 15 ஆந் திகதியே ஆகும். பரிசோதனையின் பெறுபேறுகளுக்கமைய பரிசோதனை தோல்வியடைந்திருந்தமையால் அதற்கமைய மீள அனுமதிப்பத்திரம் நீடிக்க முடியாதென குறிப்பிட்டிருந்தது அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டு 11 மாதங்களின் தாமதத்தின் பின்னர் 2018 நவம்பர் மாதத்தில் ஆகும். இந்த அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டமைக்கான | குறித்த பரிசோதனையை வெளிநாட்டு இரசாயன ஆய்வுகூடத்தில் மேற்கொள்ள நேர்ந்தமையால் பரிசோதனை அறிக்கைகளை பெற்றுக்கொள்ள 02 மாதங்கள் கடடந்திருந்தது. அந்த பெறுபேறு 2018.10.23 ஆந் திகதி இடம்பெற்று அனுமதிப்பத்திரக் குழுவிற்கு சமர்ப்பித்ததுடன், அதன் போது அனுமதிப்பத்திரத்தினை இரத்துச் செய்ய அனுமதி வழங்கப்பட்டது. அதன் பின்னர் இடம்பெற்ற அனுமதிப்பத்திரக் குழுவின் போதும் அந்த தீர்மானம் சரியானதென அறிவித்து குறித்த கம்பனிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எம்மால் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டமை அறிவிக்கப்பட்டது SLS தர நியமம் உரிய பொருட்களுக்கு மாத்திரம் என்பதனை மேலும் | மக்களுக்க தரமான பொருட்களை பெற்றுக்கொள்ள உள்ள நியம நிறுவனத்தின் பொறுப்பு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எழுதமடதுமூல சான்றுகள் இல்லாதிருந்தது. | அறிவிப்பதுடன், எதிர்காலத்தில் SLS தர நியமம் தேவையற்ற பெருட்களுக்கும் இவ்வாறான நிலைமையை அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | |
| (ஆ) | அனுமதிப்பத்திரம் அரத்துச் செய்யப்பட்டதெனும் கடிதத்திற்கு பதில் வழங்குமாறு முத்திரையிடப்பட்ட SLS குறியீட்டுடனான பொருந் தொகையான பொதிகள் காணப்படுவதுடன், அந்த பொதிகளை பயன்படுத்துவதற்கு மூன்று மாத காலம் குறித்த உற்பத்தி நிறுவனத்தினால் கோரப்பட்டிருந்த போதிலும், நியமங்கள் நிறுவனத்தினால் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து புதிய அனுமதிப்பத்திரமொன்றிற்காக விண்ணப்பிக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2019 மே வரையிலும் மீள மாதிரிப்பரிசோதனையொன்றினை மேற்கொண்டு புதிய அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பித்ததாக எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீண்டும் அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்காக புதிய விண்ணப்பமொன்று குறித்த கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மாதிரி பெறப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | இலங்கையின் நியமச் சான்றிதழ் தொடர்பில் நிலவும் நுகர்வோரின் நம்பிக்கையை பாதுகாப்பததற்காக நிறுவனம் செயற்பட வேண்டும். |
| (இ) | குறித்த உற்பத்திக்காக அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்ட நாள்முதல் 2019 மே வரையிலும், 17 மாத காலப்பகுதியினுள் SLS இலட்சினையுடன் அவை விற்பனை செய்யப்படுகின்றனவா என்பதை தேடிப் பார்ப்பதற்கு சந்தை மாதிரியொன்றினை பரிசோதித்தமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததுடன், 2019 மே வரையிலும் SLS இலட்சினையுடன் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுகின்றமை பௌதீக ரீதியாக அவதானிக்கப்பட்டது. | உரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கின்றேன். | நுகர்வோருக்கு தரமான பொருளொன்றினை சந்தையில் சமர்ப்பிப்பதற்கு நியமங்கள் நிறுவனத்திற்குள்ள சமூக பொறுப்பு தொடர்பில் கவனத்திற் கொள்ள வேண்டும். |

(ஈ) நியமச் சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்ட பழச்சாறு உற்பத்தியொன்றிற்காக வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரம் 2017/04/25 ஆந் திகதி முதல 2018/04/24 ஆந் திகதி வரையிலும் மாத்திரம் செல்லுபடியானதுடன், அந்த காலப்பகுதியின் பின்னர் அனுமதிப்பத்திரத்தினை இரத்துச் செய்வதற்கு குறித்த நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. நியமங்கள் நிறுவனத்தினால் அது தொடர்பில் விராணைகள் அல்லது நினைவுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டததான எழுத்துமூல சான்றுகள் கோவையில் இல்லாதிருந்ததுடன், 2018 ஏப்ரல் 25 ஆந் திகதி முதல் 2019 ஏப்ரல் 24 ஆந் திகதி அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 86,250 தொகைக்கு குறித்த செயலாற்றல் பற்றுச்சீட்டு 2018 யூலை 13 ஆந் திகதிய வெளியிடப்பட்டிருந்தது. எனினும், குறித்த நிறுவனத்தினால் ரூபா 40,000 பெறுமதியான காசோலையொன்ற மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. 2017 நவம்பர் 11 ஆந் திகதியின் பின்னர் மீண்டும் நிறுவன பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது 09 மாதங்களின் பின்னர் அதாவது 2018 ஆகஸ்ட் 14 ஆந் திகதி ஆகும். அத்திகதியின் பின்னர் கணக்காய்வு திகாதி வரையிலும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2018 ஆகஸ்ட் 14 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகள் பரிசோதனைக்காக 2018 ஆகஸ்ட் 29 ஆந் திகதி கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு முன்வைக்கப்பட்டதுடன், கணக்காய்வு திகதி வரையிலும் அந்த பரிசோதனையின் வருடாந்தம் அறவிடப்பட வேண்டிய பணத்திற்குரிய பற்றுச்சீட்டு தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டது. அதற்கு பதிலாக 10 மாத தாமதத்தின் பின்னர் அதாவது 2019.02.14 ஆந் திகதி தொழிற்சாலை உரிமையாளரால் ரூபா 40,000 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. சாதாரணமாக மொத்த தொகையும் (ரூபா 86,250.00) ஒரே தடவையில் செலுத்தப்பட வேண்டிய போதிலும், தெரிற்சாலை உரிமையாளரால் அனுப்பப்பட்ட மொத்த தொகையும் ஒரே தடவையில் செலுத்துவதற்குள்ள சிரமத்தினை கருத்திற் கொண்டு இந்த தொகை பெற்றுக்கொள்ளப்பட்டது. நியமங்கள் நிறுவனத்தினால் 2018.08.14 ஆந் திகதி வரையிலும் குறித்த காலப்பகுதிக்க (இரண்டாவது வருடம்) கணக்காய்வொன்றிற்காக மாதிரிப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. ITI நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட மாதிரிகளின் பரிசோதனைக் கட்டணம் செலுத்த முடியாமையால் வருடாந்தம் மொத்த தொகையையும் செலுத்த நேர்ந்த தாமதத்தினால் ஆகும். மேலும், 2019.06.17 ஆந் திகதி தொழிற்சாலையின உரிமையாளர் அவரது “SLS” சான்றிதழினை தொடர்ந்து கொண்டு செல்ல முடியாதெனி நியமங்கள் நிறுவனம் அறிவித்துள்ளமையால் மமாதிரிப் பரிசோதனை தொடர்பில் பிரச்சினையொன்று எழுவில்லை.

சந்தை மாதிரிகளீ பெற்றுக்கொள்ளப்படுவது 03 வருடங்களுக்குரிய மாதிரியொன்று மாத்திரம் ஆகும். இரண்டடாவது வருடடத்தின்று முன்னர் அனுமதிப்பத்திரத்தினை இரத்துச்

மக்களுக்கு தரமான பொருளொன்றினை வழங்குவதற்காக நியமங்கள் நிறுவனத்திடமுள்ள பொறுப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன், இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கமையினை பாதுகாப்பதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது.

| | | | |
|---|---|---|---|
| | பெறுபேறுகள் கிடைத்தமைக்கான சான்றுகள் கோவையினுள் காணப்படவில்லை. நியமங்கள் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் பெறுபேறுகளும் பரசோதனைகளுக்காக முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. 2017 நவம்பர் 11 ஆந் திகதி மற்றும் 2018 ஆகஸ்ட் 14 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நிறுவன பரிசோதனையின் போது பிரதானமான இணங்காமைகள் 03 இனங்காணப்பட்டிருந்தன. இத்துடன், அவற்றை திருத்துவதற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படவில்லை. அனுமதிபத்திரம் காலம் முடிவடைந்த பின்னர் சந்தையில் குறித்த பண்டம் விற்பனை செய்யப்படுகின்றதா என்பது தொடர்பில் 2016 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு திகதி வரையிலும் சந்தை மாதிரியொன்று பரீட்சிக்கப்பட்டமைக்கான சான்றுகள் கோவையினுள் காணப்படவில்லை. | செய்ய நேர்ந்தமையால் இதன் போது சந்தை மாதிரிகளை பெற்றுக்கொள்ளல் தொடர்பில் பிரச்சினையொன்ற எழவில்லை. 2019.08.21 ஆந் திகதியில் உள்ளபடியாக நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களை அங்கீகரிக்கும் குழுவின் போது இந்த அனுமதிப்பத்திரத்தினை இரதடதுச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

## 3.3 செயற்திட்ட அல்லது மூலதன பணிகளிலான தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரசாயன ஆய்வுகூட கட்டிடமொன்றினை நிர்மாணிப்பதற்காக இலங்கை நியமங்கள் நிறுவனம் ஹல்பராவத்த மாலபே பிரதேசத்தில் 03 ஏக்கர்கள் அளவான காணியொன்றினை கொள்வனவு செய்வதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு 03 சந்தர்ப்பங்களில செலுத்தப்பட்ட ரூபா 168 மில்லியன்னான தொகையானது 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் | 2016.08.24 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் பௌதீக உரித்து வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் கணக்காய்வு ஐயவினாக்களின் பிரகாரம் உரித்தினை பெற்றுக்கொள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | காணியின் உரித்தினை பெற்றுக்கொள்ள துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தி ய முற்பணமாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக காணியை சுற்றிழும் வேலியொன்றினை அமைப்பதற்காக 2015 மே 28 ஆந் திகதி ரூா 1,165,333 ஆன செலவினம் மேற்கொள்ள பொதுச் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டிற்காக முழுமையான கொடுப்பனவினை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், சொத்தின் உரித்தினை நிறுவனத்திற்கு கையேற்பதற்கு 2019 ஆம் ஆண்டு வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | ரூபா 150 மில்லியனான மதிப்பிடப்பட்ட செலவினத்தில ஆய்வுகூடத்தினை நிர்மாணிப்பதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டு ஒப்பந்ததாரரை தெரிவு செய்தல் மற்றும் அதனை கையளித்தல் 2018 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள் குறித்த பணி நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிள் வழங்குநர் ஒருவரை தெரிவு செய்வதற்காக பெறுகை அறிவித்தலினை மேற்கொள்ளல் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் விலைக்கேள்வியளார்களை மதிப்பீடு செய்வதற்காக சிறு பதிவேடுகளை தயாரித்தல், அமைச்சரவை அங்கீகாரத்திற்காக பெறுகைகள் குழுவானல் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதங்குரிய அறிக்கைகளை தயாரித்தல் போன்ற பணிகள் மேறைகொள்ளப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் 2019 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | உத்தேச நோக்கங்களை நிறைவேற்றுவதங்காக பாதிடப்பட்ட நிதியேற்பாடுகள் அந்த வருடத்தினுள் உச்ச மட்டத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | Gas Chromatograph mass spectrophotometer GC/MS-MS கட்டமைப்பினை நிறுவுவதற்காக ரூபா 24,606,420 பெறுமதியான 03 உபகரணங்கள் 2017 நவம்பர் 12 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டுள்ள போதிலும், 2019 மே | கிருமிநாசினி திரவங்கள் உணவுகளில் அடங்கியுள்ளதா என்பதை பரிசோதிப்பததற்கு இரசாயன ஆய்வுகூடமொன்றினை தாபிப்பதற்கு இந்த கட்டமைப்பு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே கட்டமைப்பு கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், அதற்குரிய உபகரணங்களை கொள்வனவு செய்யம் | உபகரணங்களை பெற்றுக்கொளவதற்கு முன்னர் சாத்தியவளக் கற்கையொன்று மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், இலக்கிடப்பட்ட நாட்களின் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்புக்கூற் வேண்டிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| மாதம் கணக்காய்வு திகதி வரையிலும் அந்த உபகரணம் பயன்பாடற்று காணப்பட்டது.<br><br>அவ்வாறே இந்த கட்டமைப்பினை தாபிப்பதற்கு பொருத்தமான இரசாயன ஆய்வுகூடமொன்று 2019 மே மாதம் வரையிலும் தயாரிக்கப்பட்டிராததுடன், பதவியணிக்கு தேவையான பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை. | வரையிலும் அந்த கட்டமைப்பினை கொள்வனவு செய்ய இயலாது. அவ்வாறே குறித்த இரசாயன ஆய்வுகூடத்தினுள் குறித்த பிரிசோதனைகுளக்காக ஆபத்தான இரசானய திரவியங்களை பயன்படுத்துவதற்கு நேர்ந்தமையால் பதவியணியில் மற்றும் விருந்தினரின் பாதுகாப்பும், சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பிலும் கருத்திற்கொள்ள வேண்டும் என்பதால் இரசாயன ஆய்வுகூடத்தை தாபித்து பணிகளை ஆரம்பித்தல் தாமதமாகியது. | வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள 11 பிரதான பணிகளை மேற்கொள்வதற்கு ரூபா 275.8 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த பேதிலும், அந்த நிதியேற்பட்டினை பயன்படுத்தல் தொடர்பிலான செயன்முன்னேற்றம் செயன்நடவடிக்கைத் திட்டத்தின் நிதி செயன்முன்னேற்றத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஒவ்வொரு உப பணிகளின் கீழ் பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | நிதி செயன்முன்னேற்றம் காலாண்டு ரீதியான செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் உப செயற்பாடுகளுக்காக நிதி பெறுமதியுடன்னான செயற்முன்னேற்றம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கை திட்டம் நடைமுறைச் சாத்தியமாக மற்றும் உரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட வேண்டும் என்பது. |
| (ஆ) பிரதான பணிகளின் கீழ் 44 உப பணிகளின் 13 மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 07 பணிகளின் உத்தேச இலக்குகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | காரணங்களை எதிர்காலத்தில் குறிப்பிடுகின்றேன். | செயல்நடவடிக்கைத் திட்டம் நடைமுறைச் சாத்தியமாக மற்றும் சரியான தகவல்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட வேண்டியதுடன், திட்டமிடப்பட இலக்குகளை பூர்த்தி செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | முகாமைத்துவம் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிறுவனத்தின் விசாரணை பணிகளை உயர் தரத்துடன் பேணும் நோக்கில் விஞ்ஞான ஆய்வுகூடத்திற்காக நிறுவும் சான்றிதழினை பெற்றுக்கொள்ளலின் கீழ் 2 ஆய்வுகூடத்தின தரத்தனை அபிவிருத்தி செய்தல்கள், 03 ஆரம்பத்தின் விடயப்பரப்புகள் அதிகரிக்கப்பட்டமை, 03 புதிய ஆய்வு களங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை மேற்கொள்வதற்கும் செய்முறையின் விடயப்பரப்பு மற்றம' நிறுவுதலின் விடயப்பரப்பினை வியாபிப்பதற்கும் மீளாய்வாண்டினுள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இந்த பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டினுள் இரசாயன ஆய்வுகூடங்களில் புதிய பிரிவொன்றின் அபிவிருத்தி இடம்பெற்றிருக்கவில்லை. எனினும், 2019 ஆம் ஆண்டிற்காக இந்த அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. புதிய அங்கீகாரங்களை அபிவிருத்தி செய்தல் இடம்பெறுவதுடன், 2019 செப்தம்பர் வரையிலும் அந்த நிலமைகளை அடைந்துகொள்ள உத்தேசிக்கப்படடுள்ளது. | நிறுவனத்தினால் வழங்கப்பட்டும் சேவைகளின் தரத்தினை மேம்படுத்தும் வகையில் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிட்டமுறையில் நிறைவேற்ற கவனம் செலுத்த வேண்டும். |